**நவகத்தேகம பிரதேச சபை - 2024**

-----------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

நவகத்தேகம பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நவகத்தேகம பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் நவகத்தேகம பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் ரூபா 2,812,529 கிரயம் செலவில் நிர்மாணிக்கப்பட்ட மொறகஹவெவ நீர் செயற்திட்டத்தின் பெறுமதி மற்றும் மாகாண குறித்துரைத்த மானியத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டிருந்த சமோதய முன்பள்ளிப் பாடசாலைக் கட்டிடம் மற்றும் செல்லம் முற்றத்தை நவீன மயப்படுத்துவதற்குரிய பெறுமதி ரூபா 379,824 மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது நாட்குறிப்புப் பதிவுகளின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சகல நடைமுறையல்லாச் சொத்துக்களும் மூலதனமாக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நன்கொடையாகக் கிடைத்த ரூபா 176,263 நூலகப் புத்தகங்களின் பெறுமதி மூலதன உதவியாக இனங்காணப்பட்டிருக்க வில்லை. | அடுத்து வரும் ஆண்டில் இருந்து சரியாகக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாகக் கணக்கு வைத்தல் வேண்டும். |
| (இ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண மீதியில் மூலதன ஈடுபடுத்தலுக்கான வருமானப் பங்களிப்புக் கணக்கின் மீதி சமமாக இருக்க வேண்டி இருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த கணக்குகளுக்கு இடையே ரூபா 7,525,121 வேறுபாடு காணப்பட்டது. | கணக்குகளுக்கு இடையே காணப்படுகின்ற வேறுபாட்டுகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகளுக்கு இடையிலான வேறுபாடுகளை இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலையான சொத்துப் பதிவேடு, பட்டோலை மற்றும் மெய்மையாய்வுச் சபை அறிக்கைகள் சர்ப்பிக்காமையின் காரணமாக தளபாடங்கள் மற்றும் பொருத்திகளின் பெறுமதி ரூபா 598,024 இனை திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பித்தல் வேண்டும். |

### 1.7 இணங்காமைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 571(2) | பெறுமதி ரூபா 901,010 ஆன 02 வருடங்களை விஞ்சிய வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் ஓய்வு பெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | 2025 ஆம் ஆண்டில் உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2021 செப்தெம்பர் 29 ஆம் திகதி இலக்கம் 01/2021 என்ற அரச நிதிச் சுற்றறிக்கை 2.1, 2.3 ஆம் பிரிவுகள் | திணைக்களத் தலைவர் மற்றும் பிரதேசத்தின் பிரதேச செயலாளரால் பெயர் குறிப்பிடப்படுகின்ற பிரதிநிதிகள் இருவரை உள்ளடக்கி மூன்று நபர்களைக் கொண்ட குழுவின் மூலம் பெறப்படுகின்ற பரிந்துரை இன்றி சபையால் மீளாய்வாண்டில் ரூபா 5,780,456 பெறுமதியான 04 ஒப்பந்தங்கள் கூட்டுறவுச் சங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. | அந்த தவறுகள் எதிர்காலத்தில் உள்ள வேலை விடயங்களின் போது சரி செய்யப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2019 சனவரி 10 ஆம் திகதிய இலக்கம் வ.ப.பா.தெ/01/11/04/01 என்ற உள்ளுராட்சி ஆணையாளரின் (வட மேல்) சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தி | 03 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீட்டு வாடகை திருத்த வேண்டிய போதிலும் செல்லுபடியான மதிப்பீட்டுக் காலத்தை விஞ்சி இருந்த பொதுச் சந்தைத் தொகுதியின் இலக்கம் 05 மற்றும் இலக்கம் 08 என்ற கடைகளுக்காக புதிய மதிப்பீடு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு செய்வதற்காக மதிப்பீட்டுத் திணைக்கத்திற்கு அனுப்பப்பட்ட போதும் அதற்குரிய மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,469,046 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,911,507 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2024 | | | | 2023 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 | ரூபா ‘000 |
| i. | ஆதன வரியும் வரியும் | 1,382 | 1,291 | 1,142 | 155 | 1,309 | 1,347 | 1,203 | 144 |
| ii. | வாடகை | 5,973 | 4,995 | 4,937 | 58 | 8,361 | 3,151 | 2,971 | 180 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 169 | 146 | 146 | - | 193 | 233 | 233 | - |
| iv. | ஏனைய வருமானம் | 1,804 | 1,527 | 1,331 | 196 | 2,640 | 1,919 | 1,768 | 151 |
| | மொத்தம் | 9,328 | 7,959 | 7,556 | 409 | 12,503 | 6,650 | 6,175 | 475 |

#### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **வீதவரி**<br>மீளாய்வாண்டின் இறுதியில் ஆதனவரி மற்றும் வாடகை நிலுவை ரூபா 104,894 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையில் 01 வருடத்திற்கு குறைந்த ரூபா 89,937 தொகையும், 01 வருடத்திற்கு மேற்பட்ட 03 வருடங்களுக்கு குறைந்த ரூபா 14,960 நிலுவை மீதியும் காணப்பட்டது. அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு ஆதனவரி வருமானங்களை அதிகரிப்பதற்காக சபை கவணம் செலுத்தியிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானங்களை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் ஆதனவரிப் பிரதேசங்களை இனங்கண்டு ஆதனவரி வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய 08 கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 9,620,634 ஆக இருந்ததுடன் அதில் 03 வருடங்களை விஞ்சிய 04 மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 2,023,765 ஆகும். அந்த மீதிகள் கிடைக்கின்றமைக்கான உறுதிப்படுத்தல் காணப்படாதிருந்ததுடன் பல வருட காலம் முதல் கிடைக்க வேண்டிய மீதியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய 03 கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 8,819,368 ஆக இருந்ததுடன் அதில் 03 வருடங்களை விஞ்சிய மீதிகளின் பெறுமதி ரூபா 3,219,885 ஆகும். இந்த மீதிகளின் இருப்பு தொடர்பாக உறுதிப்படுத்தி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | செலுத்த வேண்டிய மீதிகளின் இருப்பை உறுதிப்படுத்தி தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டுப்பெறுமதி ரூபா 95,000 ஆன மோட்டார் சைக்கிள் மற்றும் ஒரு நீர் பௌசர் என்பன 08 வருடங்கள் மற்றும் 11 வருடங்கள் முதல் பயன் படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பயன்படுத்துவதற்கு பொருத்தமற்றதாயின் விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டின் போது புறநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 12,977,976 செலவில் நவகத்தேகம பேருந்து நிலையக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டதுடன் அதன் மேல் மாடி நிர்மாணிக்கப்பட்டு 07 வருடங்களுக்கு அண்மித்த காலமாக பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | சபைக்குச் சொந்தமான பேருந்து நிலையக் கட்டிடத்தின் மேல் மாடி பல சந்தர்ப்பங்களின் போது கேள்வி கோரப்பட்ட போதிலும் ஆதனத்தை பரீட்சிக்கும் போது கேள்விதாரர்கள் அதனைப் பெற்றுக் கொள்ளலை நிராகரித்து இருந்தனர். | அரசாங்கத்தின் நிதியை செலவிட்டு நிர்மாணிக்கப்பட்ட வளங்களில் இருந்து உச்ச பயன்பாட்டைப் பெறுதல் வேண்டும். |
| (இ) | பெறுமதி ரூபா 17,535,239 செலவினத்தை மேற்கொண்டு 2019 ஆம் ஆண்டின் சகல துணைப் | கூட்டுப் பசளை தளம் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணியின் எல்லையினைப் | -மேற்படி- |

| | |
|---|---|
| பாகங்களுடனும் ஸ்தாபிக்கப்பட்டிருந்த கழிவுப் பொருள் நிலையம் யானைகளின் அச்சுறுத்தல் காரணமாக சேதனப்பசளை உற்பத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பிரித்தல் மற்றும் பாதுகாப்பு வேலி நிர்மாணிக்கும் அடிப்படைத் தேவைக்கு உட்பட்டிருந்தது. |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் நிர்வகிக்கப்படுகின்ற மற்றும் பராமரிக்கப்படுகின்ற 14 மயான நிலங்களின் சட்ட ரீதியான உரித்தை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 14 மயான நிலங்களில் 10 இனைக் கையேற்பதற்கு தேவையான சுகாதார மருத்துவ உத்தியோகத்தரின் பரிந்துரையைப் பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி 04 மயான நிலங்களும் மஹமெத்தேவ மயான நிலம் ஒதுக்க பிரதேச காணியாக காணப்படுகின்றமையால் கையளிக்க முடியாது இருந்ததாக புத்தளம் மாவட்ட வன அலுவலகத்தால் வாய் மொழி மூலம் எங்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எஞ்சிய 03 மயாண நிலங்களும் கூடிய விரைவில் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபை பராமரிக்கின்ற ஆதனங்களின் சட்ட ரீதியான உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு ஆரம்பத் தரத்தின் பதவிகளுக்குரிய 02 வெற்றிடங்களும், இரண்டாம் தரத்தின் பதவிகளுக்குரிய 06 மிகை ஊழியர்களும் 06 காணப்பட்டனர். | ஆரம்ப தரத்தின் பதவிகளுக்கு உரிய ஊழியர்களைச் சேர்க்க வேண்டுமென உள்ளுராட்சித் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | ஊழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகையினை அங்கீகரித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தயாரிக்கபட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்தில் மக்களுக்கு சேவை வழங்குவதற்காக 29 செலவின விடங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 557,000 நிதியேற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டிருந்ததுடன் 27 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,217,000 ஆன நிதியேற்பாட்டுத் தொகையில் 50 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையிலான வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தது. தேவைகள் சரியாக இனங்காணாமல் மதிப்பீடு தயாரித்தல் மற்றும் திட்டமிடப்பட்ட பிரகாரம் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தாமை இந்த சேமிப்புக்கு தாக்கமளித்திருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | பாதீடு செய்யப்பட்ட இலக்கினை அடைந்து கொள்ளக் கூடிய வகையில் செயற்பாட்டு நடவடிக்கைகளை திட்டமிடல் வேண்டும். |